Police pickets in Examination Centre.

*247 *Q*.—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether police pickets were posted at Examination Centres in 1968 ?

மாண்புமிகு திரு. மு கருணாநிதி : ஆம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர் தேர்வு எழுதும்போது, அங்கு போலீஸ்காரர்களை நிறுத்த வேண்டிய அவசியம் என்ன ? போலீஸ் காவல் அங்கே தேவைப்படுகிறதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: தலைவர் அவர்களே அப்பொழுது நடைபெற்ற இந்தி எதிர்ப்பின் காரணமாக அப்போது அது தேவைப்பட்டது. தொடர்ந்து அப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் என்று அல்ல ; அந்த நிலையில் தேர்வுகள் எழுதப்படும் என்ற நிலைமையும் இல்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, the very fact that police pickets are being posted at the examination centres clearly indicates the miserable degree to which our educational standards have gone down. This has been due to the neglect of the qualitative side of Education. Keeping this in view, will the Hon. Minister be pleased to state, whether he will be pleased to constitute a committee consisting of educationists and members of this House to study the problem and devise ways and means to avoid police bandobust arrangements ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்போது அதற்கான எந்தக் குழுக்களையும் அமைப்பதற்கான யோசனை இல்லை.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1968-ல் நடந்த பரீட்சையின்போது போலீஸ் காவல் போடப்பட்டதாகச் சொல்லப் படுகிறதே, எந்த இடத்தில், எவ்வளவு போலீசை போட்டார்கள் ? அப்படி போடவேண்டிய நிர்ப்பந்தம் என்ன ஏற்பட்டது? ஒருசில மாணவர்கள் பரீட்சைக்கு வந்தால், அவர்களை மற்ற மாணவர்கள் தடுப்பார்கள் என்று பயந்துகொண்டுதானே காவல் போட்டார்கள் ? எத்தனை மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள் ? எத்தனை மாணவர்கள் பரீட்சை எழுதவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வியில் எத்தனை துணைக் கேள்விகள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கோவை, சேலம், செங்கற்பட்டு ஆகிய இடங்களில் இந்தப் பாதுகாப்பு அளிக்கப் பட்டது. பரிட்சை எழுத முன்வந்த மாணவர்களை மற்ற மாணவர்கள் தடுப்பார்கள் என்று பயந்துகொண்டுதானே காவல் போட்டீர்கள் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போதிருந்த அமளியான சூழ்நிலையில் தேர்வுகளை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்பதற்காக அந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

திரு எம் எஸ். மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் பரிட்சை எழுதுகிற நேரத்தில் ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்படும் என்று கருதி அரசாங்கத்தினால் முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு அளிக்கப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கல்வித் துறையின் காரியதரிசி இதுபற்றி போலீஸ் ஐ. ஜி. அவர்களுக்கு எழுதி, முன்னெச்சரிக்கையாகத்தான் பாதுகாப்பு அளித்தார்கள்.